# சிக்மகளூரில் அமைதியான வாக்குப்பதிவு

★ ★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 20 ஜுல்ஹஜ்: 4 இதழ்: 266
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-11-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

## நாளை முடிவுகள் வெளியாகும்

சிக்மகளூர், நவ. 5

சிக்மகளூரில் இடைவிடாது மழை பெய்து கொண்டிருந்த போதிலும், இடைத் தேர்தல் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. சிக்மகளூரின் 5 லட்சத்து 35,000 (மொத்த) வாக்காளர்களில் 65 சதவீதமானவர்கள் வாக்களித்ததாக அறிவிக்கப்பட்டது.

சிறு மோதல்களைத் தவிர முழு அமைதி காணப்பட்டதென்றும், கிராமங்களில் கூட விறுவிறுப்பான வாக்களிப்பு நடைபெற்றதென்றும் அறிவிக்கப்பட்டது.

இடைவிடாத மழை பெய்த போதிலும் வாக்காளர்கள் குடைகளைப் பிடித்தவாறு வரிசையாக நின்று வாக்களித்தனர். இன்றுகாலை முதலிரு மணித்தியாலங்களுக்குள் ஆறில்ஒரு பகுதியினர் வாக்களித்துவிட்டதாகத் தெரிவிக்சப்பட்டது.

இத்தேர்தலில் முறைகேடுகள் நடத்துள்ளதாக காங்கிரஸ் கட்சியும் ஜனதாக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளன

(8-ம் பக்கம் பார்க்க)

### கடலில் தத்தளித்து, வள்ளமும் பழுதடைந்த நிலையில்

# பூநகரியில் கரைசேர்ந்த

# 6 இந்திய மீனவர்

(நமது கிளிநொச்சி நிருபர்)

**இராமேஸ்வரத்திலிருந்து ஒரு படகில் புறப்பட்ட ஆறு மீனவர்கள், பலத்த மழையினாலும் கடுங்காற்றினாலும் திசைதிருப்பப்பட்டு, படகும் சேதமுற்ற நிலையில் கச்சதீவுக்கருகே திக்குத் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில், இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.**

இந்திய மீனவர்கள் ஆறு பேரும் நேற்று மாலை கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். கிளிநொச்சிப் பொலிஸார் இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

### 2ம் திகதி புறப்பட்டனர்

பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்திலிருந்து தெரியவருவதாவது;

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எம். தேவராஜா, (33 வயது), எம். ஜீவர்லால் (18 வயது), வி. ஞானராஜா (21 வயது), வி. கந்தசாமி (35 வயது), ஏ. கணேசன் (30 வயது), எஸ். எஸ். கார்மேகம் (35 வயது) ஆகிய ஆறுபேரும் ''பிரான்ஜூஸ்'' என்னும் பெயருடைய ஒரு மோட்டார் வளளத்தில் கடந்த 2-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இராமேஸ்வரக் கரையிலிருந்து மீன்பிடிக்கப் புறப்பட்டனர்.

மூன்றும்திகதி வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை, கடுங்காற்றுக் காரணமாக இவர்கள் படகு திசைமாறியதுடன் என்ஜினில் கோளாறு ஏற்பட்டு காற்றினால் அள்ளுப்பட்ட இவர்கள் இராமேஸ்வரத்துக்கும் கச்சதீவுக்குமிடையே திசைமாறிகொண்டு செல்லப்பட்டபோது படகின் சுக்கானும் பழுதடைந்தது.

திசைதடுமாறித் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் இலங்கையிலிருந்து மீன்பிடிக்கச் சென்றவர்கள் இவர்களைக் கண்டு உதவ முன்வந்தனர். இந்திய மீனவர்கள்

[8ம் பக்கம் பார்க்க]

# ஜெயகாந்தன் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் ஜெயகாந்தன் இவ்வாண்டு இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இலங்கைமுற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பின்பேரில் தாம் இங்கு வருவதாகத் தம்மைச்சந்தித்த ஈழத்துச் சிவானந்தனிடம் திரு ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

'பாவம் இவள் ஒரு பாப்பாத்தி' என்ற ஜயகாந்தனின் நாடகத்தையும் அவர் இங்கு அரங்கேற்றுவதற்குத் தம்மிடம் விருப்பம் தெரிவித்ததாகவும் ஈழத்துச்சிவானந்தன் கூறினார்.

## புலவர்மணி மறைவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''தமிழை வளர்ப்பதற்கு அருஞ்சேவை புரிந்த பேரறிஞர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மறைவு. தமிழுலகுக்கு ஓர் பெரும் இழப்பு. தமிழர் இருக்கும்வரை அவர் நாமம் வாழும்.''

புலவர்மணி மறைவு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (மக)

### தமிழ்நாட்டில் கடும்மழை; வெள்ளம்; நிலச்சரிவு

# நீலகிரியில் உயிருடன் 64 பேர் புதையுண்டனர்!

(சென்னை)

தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுகளினால் நேற்றுவரை சுமார் நூறு பேர் பலியாகிவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுளளது.

### நீலகிரியில் 64 பேர் பலி

நீலகிரி மாவட்டத்தில் இடைவிடாது பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் 64 பேர் உயிருடன் புதையுண்டனர், 23 பேரைக் காணவில்லை.

தஞ்சாவூரில் கடும் மழையைத் தொடர்ந்து ஒரு வீடு இடிந்து விழுந்ததில் ஆறுபேர் ஸ்தலத்தில் மாண்டனர்.

கோயம்புத்தூரில் மூன்று பெண்களும் இரண்டு குழந்தைகளும் வெளளத்தில் அள்ளுண்டு செல்லப்பட்டனர். சேலத்தில் இரண்டு நாட்களாகத் தொடர்ச்சியாக பெய்யும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவில் ஐவர் பலியானார்கள்.

### கேரளத்தில்...

கேரளத்திலும் கடும்மழை பெய்து கொண்டிருக்கிறது. நேற்றுவரை வெள்ளத்தினால் இங்கு பலியானவர்களின் தொகை 15 ஆக அதிகரித்துள்ளது.

# வெள்ளத்தினால் வடக்கில் நெற்பயிர்கள் நாசம்!

## பீட்றூட், கோவா பயிர்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தினால் வடக்கில் பலபகுதிகளிலும் அண்மையில் விதைக்கப்பட்ட நெல் விதைகள் யாவும் அழிந்து போயுள்ளது.

பீற்றூட், கோவா போன்ற பயிர்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால பாதிக்கப்பட்டவர்களை தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சந்தித்ததுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார்.

### கொக்குவில் சந்தை

கொக்குவில் கிராமாட்சி மன்றத்தின் மேற்பார்வையின் கீழ் இருந்த கொக்குவில் பொதுச்சந்தை மழை காரணமாக வீழ்ந்துள்ளது. இதேநேரத்தில் இங்கு வீழ்ந்த சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதி வீதியையும் தடைப்படுத்தியுள்ளது இங்கு வியாபாரம்செய்தவர்கள் சந்தை வீழ்ந்துவிட்டமையினால் வியாபாரத்தை ரேட்டுக் கரையில் நடத்துகின்றனர்.

வியாபாரிகள் ரேட்டுக்கரையில் வியாபாரத்தை நடத்துவதால் பொதுமக்கள் அங்கு குழுமிநிற்பதால் போக்குவரத்துச்செய்வதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

### தலையாளியில் வெள்ளம்

இதேநேரத்தில் தலையாளியில வெள்ளம் வடியாமல் தேங்கி நிற்கிறது. இதற்குக் காரணம் மதவு துப்பரவுசெய்

[8ம் பக்கப் பார்க்க]

### சுண்டிக்குளி பஸ் நிலையத்தில்

## 'பிக்பாக்கட்' அடித்ததாக 7 பெண்கள் கைது

[யாழ்ப்பாணம்]

பஸ்பிரயாணிகளிடம்'பிக்பாக்கொட்' அடிந்த 7குறப் பெண்கள் பிரயாணிகளிடம் கையும் மெய்யுமாகச் சிக்கிக்கொண்டதால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

சுண்டிக்குளி பஸ்தரிப்புநிலையதில் நேற்றுமுன்தினம் காலை இச்சம்பவம் நடந்தது. பஸ்பிரயாணிகள் நெருக்கமாக ஏறிக் கொண்டிருந்தபோது, ஆஸ்பத்திரி வீதிகளில் சாஸ்திரம் சொல்லும் 7 பெண்களும் பஸ்ஸில் ஏறுவதுபோல் பாசாங்குசெய்து 'பிக்பொக்கட்' அடிப்பதில ஈடுபட்டனர். ஒரு பெண் கைக்குழந்தையுடன் வந்திருந்தார்.

குடும்பத்துடன் வந்த ஒருவரிடம் 100 ரூபாவை 'போசு'

[8ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

50 வயதுக்கு மேற்பட்ட பெண் 3 வயதுடைய குழந்தையைப் பராமரிக்க உடன் தேவைப்படுகிறுர். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு: விளம்பர இல: 0734, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0734

## சந்நிதியில் சூரசங்காரம்

(சரணவாய்)

தொண்டமாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று சூரசங்கார உற்சவம் நடைபெறும். கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு ஆலய மடங்களில் தினசரி அன்ன தானம் வழங்கப்பட்டுவருகிறது. (அ)

# கோவில்சென்று திரும்பிய பெண்ணின் சங்கிலி அபேஸ்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியை பெல்ஸ் அணிந்த வாலிபர்கள் சிலர் செட்டித்தெருவிலுள்ள செட்டித்தெரு ஒழுங்கைச் சந்தியில்வைத்து அறுத்துக் கொண்டு சைக்கிளில் ஓடித் தப்பிவிட்டார்களாம். சங்கிலியைப் பறிகொடுத்த பெண்ணும் அவருடன் கூடச்சென்ற பெண்ணும் திடீர் அதிர்ச்சிக்குள்ளானதினல் பிரமை பிடித்து நின்றுவிட்டார்களாம். பின்னர் இவர்கள் கூச்சலிட்ட போதும் திருடர்களைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது.

வாலிபர் கோஷ்டியொன்று தினமும் மேற்படி சந்தியில் நின்று வீதியால் போகும் பெண்களையும், மாணவிகளையும் கிண்டல்செய்வது சேஷ்டைகள் செய்துவிட்டு ஓடுவதும் வீடுகளுக்கு நள்ளிரவில் கல்லெறிவதும் வீட்டுக்கதவுகளைத் தட்டி பெண்களை இழிவாக அழைப்பதும் வழமையாகிவிட்டதென்று கூறப்படுகின்றது இதுபற்றி பொலிசாருக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது இப்பகுதியில்உள்ள ஒரு வீட்டில் பசுமாட்டைக் கடத்திக் கொண்டுசென்று பின் இருபாலையில் கோப்பாய் பொலிசாரால் மீட்கப்பட்டது தினசரி நடைபெறும் கோழிக்களவுகள் வெளியில் காயப்போடும்உடுப்புக் களவுகளுக்கும், வீதியில் செல்பவர்கள் கொண்டுசெல்லும் பார்சல்களைப் பறிப்பது போன்ற திருட்டுச் சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இதனுல் செட்டித்தெரு, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் குறுக்குத்தெரு பகுதிகளில் குடியிருப்போர் மாலையானதும் வீடுகளைப்பூட்டி வெளியில் செல்வதைத் தவிர்த்துக் கொண்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இரவில் ரோந்து சுற்றும் பொலிசார் எப்போதாவது ஒருமுறை இவ்வீதிக்கு வர நேர்ந்தால் இவ்வாலிபர்கள் ஓடிமறைந்து விடுவார்களாம்.

பொலிஸில் புகார்செய்பவர்களை இரவில்வந்து பயமுறுத்துவதும் கோஷ்டிகளாகவந்து அட்டகாசம்புரிவதும் இப்பகுதியில் சகஜமாகிவிட்டதாம்

பொலிசார் இதுகுறித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதிமக்கள் கோரிக்கைவிடுக்கவிருக்கிறுர்கள்.

## நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் புனரமைப்பு பொதுக்கூட்டம் அளவெட்டி சமாஜ மண்டபத்தில் சங்க உபதலைவர் திரு. ச. அப்பாத்துரை தலைமையில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் தெரிவு விபரம் பின்வருமாறு:

தலைவர்: த. கனகரத்தினம், உபதலைவர்: ப யோகநாதன், செயலாளர்: மு குணரத்தினம், உபசெயலாளர்: வ. பரம்சோதி, பொருளாளர்: க. சண்முகநாதன். 6 உறுப்பினர்களைக் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

# 'தீண்டாமைக்கு முடிவுகாலம் வந்து விட்டது''

(மாவிட்டபுரம்)

''பன்னெடுங்காலமாக எம்மைப் பீடித்துள்ள தீண்டாமை என்னும் சமூகக் குறைபாடு எம்மைவிட்டு அகலவேண்டிய காலம் வந்து விட்டது''

இவ்வாறு வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான கருத்துக்களை மாணவர்களிடையே பரப்பும்முகமாக ஏற்பாடுசெய்யப்பட்ட கூட்டமொன்றில் பேசுகையில் வித்தியாலய அதிபர் திரு. க. திருநாவுக்கரசு கூறினுர்.

மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் அதிபர் மேலும் பேசுகையில், இவ் வித்தியாலயத்தை பொறுத்தவரை சாதிவேறுபாடு போன்ற குறைபாடுகள் என்றும் எழுந்ததில்லை'' என்றுர்.

பலாலி ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திரு க. சச்சிதானந்தன் பேசுகையில், எமது இனத்தை இடையிலே பீடித்த சாதி என்னும் நோயை சொந்த அளவில் ஒழிக்க நாம் தயங்கினுலும் பொதுவாழ்வில் முற்ருக ஒழிக்க முயலவேண்டும் அப்போதுதான் நமக்கு விடிவு ஏற்படும் என்றுர்.

ஆசிரியர் நா. கருணனந்தசிவம் பேசுகையில் சாதி என்னும் சாபக்கேட்டால் பலர் மதம் மாறவும் துணிந்து விடுகிறுர்கள் அதனுல் நாம் நமது மக்களில் ஒருபகுதியினரை இழக்கவேண்டிவரும். ஆகவே சாதியை ஒழிக்க அனைவரும் பாடுபடவேண்டும் என்றுர்.

மற்றும் சட்டுவன்புலம் வித்தியாலய அதிபர் திரு. கதிரவேலு, மயிலணி சைவ வித்தியாசாலை அதிபர் திரு. ப. சுப்பையா உட்பட பலர் பேசினர். (உ)

## எதிரிகள் விடுதலை

(வேலணை)

நாரந்தனையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கொன்றில் எதிரிகளான தந்தையும் மகனும் விடுதலை செய்யப்பட்டனர்.

வழக்காளிதரப்பினர் திருப்திகரமான முறையில் குற்றச்சாட்டை நிரூபிக்கத்தவறிவிட்டதால் எதிரிகளைத் தாம் விடுதலை செய்வதாக நீதிபதி தெரிவித்தார்.

இவ்வழக்கில் நாரந்தனையைச் சேர்ந்த விஞசித்தப் பிபாலசிங்கம் என்பவரை அதே இடத்தைச்சேர்ந்தபஸ்தியான் பிரான்சிஸ், அவரின் மகன் பிரான்சிஸ் ஜெயம் ஆகியஇருவரும் தாக்கியதாக ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ப. கதிரவேலுவின் அனுசரணையுடன் அமரியாம்பிள்ளை ஆஜரானுர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ந. சிறிகாந்தா ஆஜரானுர். (உ)


## சிறந்த பொருட்களைச் சிக்கன விலையில் வெளிநாடுகளில் இருந்து தருவித்து இருக்கின்றேம்!

பற்பல வர்ணங்களில் -- பல அளவுகளில்

❖ சைனு பிளாஸ்குகள்

❖ தேர்மஸ் பிளாஸ்குகள் (Made in England)

உறுதியானவை! பாவனையில் சிறந்தவை! நீண்ட நேரம் சூட்டை வைத்துக்கொள்ளக் கூடியவை!

உங்கள் இல்லங்களில் ஒளியேற்ற

❖ சைனு அரிக்கன் லாம்புகள்

விறகு தட்டுப்பாடு என்ற கவலை விட்டு சுவையான, சிக்கனமான, துப்பரவான சமையலை விரும்பும்

நவநாரீ மணிகள் பாவிக்கும்

யப்பானிய தானியங்கும்

**L. P. காஸ் அடுப்புகள்**

(இப்பொழுது புதிய குறைக்கப்பட்ட விலைகளில்)

சுவையான அதிக தேநீர் தயாரிப்பதற்கு

Falcon Brand — பல்கன் ரின்பால்

மற்றும் உங்கள் வீட்டிற்குத் தேவையான சகல பொருட்களையும் நவீன சமையலறைப் பொருட்கள் -- கைக்கடிகாரங்கள் யாவற்றையும் வாங்குவதற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

## முஹமதலி அப்துலலி

இறக்குமதியாளர்கள்

5 & 7, பெரியகடை, போன்: 515 யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர், பொன்னுத்துரை கைம்பெண் மாணிக்கம்
(மரணம்)
வழக்காளி

காரைநகர், 1. பொன்னுத்துரை நவரத்தினமும்
2. பெண் சாரதாதேவியும்
பதில் வழக்காளிகள்

இல. ஈடு/11264

எதிராக

யாழ்ப்பாணம் - வண்ணூர்பண்ணை கிழக்கு,
சண்முகம் தருமலிங்கம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/11264-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 20-ந் திகதி (20-11-78) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 27,958/-ம், இதில் ரூபாய் 25000/-க்கு 25-11-69 திகதி தொடக்கம் 30-5-70 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 1117-93 சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணூர்பண்ணை கோவிற்பற்று வண்ணூர்பண்ணை வடகிழக்கிறை ''மயில்வளவும் முதலிவளவும்'' நிலைப்பரப்பு இரண்டு (2)ம் கல்வீடும் கிணறும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சின்னத்துரையின் ஆதனம், வடக்கு அம்பலவாணர் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம், மேற்கு நாகராசாவின் ஆதனம், தெற்கு ரேட்டு. இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

தெல்லிப்பழை,
26-9-78. 0730

## யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்

# உதைபந்தாட்டப் போட்டி 1978

இடம்: யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6-11-78 | திங்கள் | | 3 x 1 | ஸ்கந்தவரோதயா எதிர் | அருணோதயா |
| | | | 2 x 1 | மானிப்பாய் இந்து '' | யூனியன் |

(கால் இறுதி ஆட்டத்திற்கு தகுதி காண் மீள் ஆட்டம்)

### நொக் அவுட் நிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7-11-78 | செவ். | QF, | 3 x 1 | உரும்பிராய் இந்து | VS விக்டோறியா |
| | | QF, | 2 x 1 | நடேஸ்வரா | VS மானிப்பாய் இந்து/யூனியன் |
| | | SF, | 1 x 1 | மகாஜன | VS யாழ் இந்து |
| 8-11-78 | புதன் | QF 2 | 2 x 1 | ஸ்கந்தா | VS மகாஜன |
| | | SF 2 | 1 x 1 | யூனியன் | VS ஸ்கந்தா |
| 9-11-78 | வியா. | QF 2 | 3 x 1 | மத்தியகல்லூரி | VS ஸ்கந்தா/அருணோதயா |
| | | QF 3 | 3 x 1 | நடேஸ்வரா | VS மானிப்பாய் இந்து |
| | | QF 3 | 2 x 1 | கொக்குவில் இந்து | VS யாழ் இந்து |
| 10-11-78 | வெள்ளி | QF 4 | 3 x 1 | யாழ் இந்து | VS மகாஜன |
| | | QF 4 | 2 x 1 | உரும்பிராய் இந்து | VS ஒஸ்மானியா |
| | | | 1 x 1 | SF 1இல் தோற்றவர்கள் | |

VS

SF 2 இல் தோற்றவர்கள்

(3-ம் இடத்தை நிர்ணயிப்பதற்கு)

| | | | |
|---|---|---|---|
| 12-11-78 | ஞாயிறு | 1 x 1 | இறுதி ஆட்டம் |
| | 1-ம் ஆட்டம்: | | 2-30க்கு ஆரம்பம் |
| | 2-ம் ஆட்டம்: | | 3-15க்கு ஆரம்பம் |
| | 3-ம் ஆட்டம்: | | 4-15க்கு ஆரம்பம் |

நொக் அவுட் நிலை தொடர்பாக இதற்கு முன் வெளியாகிய அறிவித்தல்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பிரவேசம்: -/50 சதம், பவிலியன் 1/- ரூபா, ஆசனம் 2/- ரூபா

நா. சோமசுந்தரம்,
கௌரவ செயலாளர்.

யாழ் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்,
5-11-1978. 0735

# "கிழக்கிற்கும் வடக்கிற்கும்புலவர்மணி இலக்கியப் பாலமாயமைந்தவர்"

## யாழ். வளாகத் தலைவர் 'வித்தி' செய்தி

(யாழ்ப்பாணம்)

"விபுலானந்த அடிகள் தொடர்பாலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தொடர்பாலும் புலவர்மணிபெரியதம்பிப் பிள்ளை வடஇலங்கைக்கும் கிழக்கிலங்கைக்கும் ஓர் இலக்கியப்பாலமாக அமைந்த ."

இவ்வாறு யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையின் மறைவு குறித்து வெளியிட்ட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் கலாநிதி வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளதாவது:

"இயற்கைக் கவி வளம் படைத்த மட்டக்களப்பிலே பல புலவர் தோன்றித் தமிழ் வளத்தைப் பெருக்கியிருக்கின்றனர். வித்துவான் ச. பூபாலபிள்ளை, அ. சரவணமுத்தன், குமாரசுவாமிஐயர், பண்டிதர் குஞ்சித்தம்பி, வித்துவான் வைத்திலிங்கதேசிகர், புலவர் விஞசித்தம்பி முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் போன்றோர் குறிப்பிடற்குரியவர். இவர்கள் வரிசையில் விபுலானந்த அடிகளாருக்குப் பின் 02-10-1978 வரை தமிழ்க்கவிதை உலகிலே கிழக்கிலங்கையிற் கவியரசாக விளங்கியவர் காலஞ்சென்ற புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்களே.

"விபுலானந்த அடிகள் தொடர்பாலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தொடர்பினாலும் இவர் வட இலங்கைக்கும் கிழக்கிலங்கைக்கும் ஓர் இலக்கிய பாலமாக அமைந்தார். விபுலானந்த அடிகளின் தொடர்பாலே தமது அறிவை வளம்படுத்தியதோடு அமையாது, விபுலானந்த அடிகளாருக்குப் பலவகையிலே கைகொடுத்துதவிய யாழ்ப்பாணத்தின் கல்வி வளத்தினையும் சான்றோர் தொடர்பினையும் உணர்ந்துகொண்டார்

இயல்பாகவே இயல், இசை, நாடக அமைதிகள் பெற்ற விளங்கும் மட்டக்களப்பிலே மண்டூரைப் பிறப்பகமாகக் கொண்டு குருக்கள் மடத்தைப் புக்கமாகக்கொண்ட புலவர் மணி. யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் நிறுவிய காவிய பாடசாலையிலே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து சுன்னகம் குமாரசுவாமிப்புலவரிடம் முறையாகப்பாடங்கேட்டார். காவிய பாடசாலையிலே தொடங்கிய தொடர்பு இவர்கள் இருவரையும் நெருங்கிய நண்பர்களாக்கி, இலக்கிய உலகிலே இருபிரதேசங்களுக்குமிடையில் ஒரு பாலத்தையும் அமைத்துவிட்டது. எமக்கும் மட்டக்களப்புக்கும் கலைத்துறையிலும் கல்வித்துறையிலும் இணைப்பு பல்லாண்டிருந்தமையால் பண்டிதமணியைப் பார்க்கச் சென்றபோதெல்லாம் அவர் புலவர்மணிபற்றி விசாரித்துக்கொள்வார் அவரது கவியாற்றலை வியந்து பேசுவார்

கீதைக் கவிசெய்து கீர்த்தி
மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி எனதன்பன்-
-ஓதக்கேள்
பாட்டுக்கொருபுலவன்
பாரதியென் றொருவர்
பாட்டுக் கிவனென்பன்
யான்.

எனப் புலவர்மணியைப் பண்டிதமணி பாராட்டியதை யாவரும் அறிவர்.

இலங்கை மணித்திருநாடு என்ற தேசிய கீதத்தோடு பிரபல்யம் பெற்றபுலவர்மணி, மண்டூர்ப்பதிகம், மீனாட்சிப் பத்து முதலிய நூல்களின் ஆசிரியராவர். இவர் சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகத்தை நாடகமாக எழுதியுள்ளார். இவர் சில ஆண்டுகளுக்கு முன் பகவத்கீதை வெண்பாப் பாடிச் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றார். ஒருகாலத்தில் 'வெண்டாவிற் புகழேந்தி' என்றிருந்தது. இக்காலத்திலே 'வெண்பாவிற் பெரியதம்பி' எனக் கவிதை உலகு இவரைப் பாராட்டியது. சாரமற்ற கவிகள் பாடும் 'கவிஞர்' மலிந்துள்ள காலகட்டத்திலே, உயிர்ப்புள்ளகவிதைகள்பாடிய புலவர்மணியை நாம் பெற்றிருந்தமை எமது பாக்கியமே.

"இன்று ஈழத்துத் தமிழ் பேசும மக்களிடையே பல கலாநிதிகளும் பண்டிதமணிகளும் புலவர்மணிகளும் தோன்றியிருக்கின்றார்கள் ஆனல் ஈழத்திலே பண்டிதமணி என்பது திருநெல்வேலி கணபதிப்பிள்ளை அவர்களையும். புலவர்மணி என்பது மண்டூர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களையும் சிறப்பாகக் குறிக்கும்.

"மட்டக்களப்புக்கும் எமக்குமுள்ள நெருங்கிய தொடர்பிற் புலவர்மணி அவர்களும் ஒரு பலமாக இருந்தார். அவரை எண்ணும்போதெல்லாம் எத்தனையோ நிகழ்ச்சிகள் உரையாடல்கள் கண்முன் தோன்றுகின்றன.

"அவரை மறப்பதற் [illegible]" (அ)

"சத்தியப்பிரமாணம் செய்ததால்

# உலகப்பிரசாரத்திற்கான நல்லவாய்ப்பைஇழந்தோம்'

## ஜெயக்கொடி கவலை

(புலோலி)

"தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யும்விடயத்தில் சிந்தனையுடன் நடந்திருக்கலாம். ஆனல் இவர்கள் நடந்துகொண்டவிதத்தினல் உலகப்பிரசாரத்திற்கான சிறந்ததொரு வாய்ப்பை இழந்துவிட்டோம்".

இவ்வாறு முன்னள் உடுப்பிட்டி எம்.பி.திரு.கே. ஜெயக்கொடி துன்னலை வடக்கில் நடைபெற்ற கலைவிழாவில் பேசுகையில் கூறினர் திரு. எஸ். சிவபாதம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு ஜெயக்கொடி தமது உரையில் கூறியதாவது:

### வித்தியாசம் உண்டு

"ஒரு கட்சிக்குள் தீர்மானங்கள் எடுக்கப்படும்போது. யார் ஆதரவளித்தனர், யார்எதிர்ப்பக்காட்டினர் என்பது பற்றி வெளியில்தெரியவருவதுசிறந்ததாகாது. கடந்த 1972ம் ஆண்டு புதியஅரசியலமைப்புக்குச் சத்தியப்பிரமாணம் எடுப்பது பற்றித் தீர்மானம்கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவளித்தவர் யார் யார். அதனை எதிர்த்தவர் யார்யார் என்ற விபரத்தினை நான் வெளியிடுவது எனக்கு அழகானசெயலல்ல. எனினும் அன்றைய- இன்றைய அரசியல் நிலைமைகளில் அதிக வித்தியாசம் உண்டு.

"1972ம்ஆண்டுசத்தியப்பிரமாணம் எடுக்காவிட்டால், அடுத்தடுத்து உபதேர்தல்கள் நடந்துவிடும் அல்லது உபதேர்தல்கள் நடவாது காலம் தள்ளப்படலாம். ஆனல் இன்றைய நிலையிலே சத்தியப்பிரமாணம் எடுக்காவிட்டால், கூட்டணித் தலைவர்கள்தான் அடுத்துவரும் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். எனவே பச்சோந்திகள் போன்ற ஏனையவர்கள் நாடாளுமன்றம் சென்றுவிடுவார்கள் என்ற பயம் ஏற்படத் தேவையில்லை இதனைக் கருத்திற்கொண்டு சகல கூட்டணி எம். பி க்களும் சத்தியப் பிரமாணம் செய்யும் விடயத்தில் சிந்தனையுடன் நடந்திருக்கலாம். ஆனல் இந்த எம் பி க்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் விடயத்தில் நடந்துகொண்ட விதத்தினல் உலகப்பிரசாரத்திற்கான சிறந்ததொரு வாய்ப்பை நழுவவிட்டுவிட்டோம்.

### எனக்கு உரிமையுண்டு

பாராளுமன்ற உறுப்பினர் என்றால் தன்கருத்துக்களையும், ஆலோசனைகளையும் குழுக்கூட்டங்களில் தெரிவிக்கலாம். ஆனல் நான் இன்று அதற்கு வெளியே இருப்பதனல் எனது கருத்தினை வெளியிட எனக்கு உரிமை இருப்பதனலேயே இக்கருத்தினை வெளியிடுகிறேன்

ஐக்கியநாடுகள் சபையில் தனிநபரான திரு. வைகுந்தவாசன் புரிந்தஅரியசாதனையை பலபேர் அங்கம் வகிக்கும் கூட்டணியினல் புரியமுடியாதிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதனை கூட்டணி எம். பி.க்கள் கருத்திற்கொண்டு தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவேண்டும்" என்றார். (உ)

"யாழ்ப்பாணம் சென்று

# பழையநண்பர்களை

## காணும் ஆவல் கொண்டிருந்தார்"

[கொழும்பு[

"யாழ்ப்பாணத்திற்குச் சென்று புலவர் மணி பெரியதம்பிபிள்ளை தம் பழைய நண்பர்களைப் பார்க்க வேண்டுமெனவும் குறிப்பாகப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் செல்லவேண்டுமெனவும் மிகுந்த ஆசைகொண்டிருந்தார்புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் மறைவு குறித்து வாழைச்சேனை தேசியகடதாசிக் கூட்டுத்தாபனத்தின் முன்னள் தலைவரும் புலவர் மணியின் நெருங்கிய நண்பருமான திரு. கே. வி. தங்கராஜா விடுத்துள்ள செய்தியில் இவ்வாறுகூறியுள்ளார். இச் செய்தியில்அவர்மேலும்கூறியிருப்பதாவது. 'கடைசியாக சென்ற மாதத்திற்கு முந்திய மாதம் இங்குவந்திருந்தபோது யாழ்ப்பாணத்தில் தாம் கல்விகற்ற காலத்தை நினைவுகூர்ந்து தம்முடன் பயின்ற நண்பர்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

எண்பது வயதான போதிலும் நாற்பது வயதுடையவர் போலச் சிறந்த சிந்தனையாளராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தார். தளராத உறுதியுடன் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் பஸ்ஸிலும் ரயிலிலும் பிரயாணம் செய்வார் "வெண்பாவுக்குப் புகழேந்தி" என்ற மொழி மாறி "வெண்பாவுக்குப் பெரிய தம்பி" எனக் கவிதை போற்றப் பகவத்கீதை வெண்பாவை ஆக்கியளித்த புலவர் மணி எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என் உள்ளம் கவர்ந்தபுலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஆத்மா இறைவனடி சேர்ந்து பேரின்பப்பேறடையப் பிரார்த்திப்போம்" [உ]

### பொலிஸ் வலையில் சைக்கிளோட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சுன்னகம்பொலிஸ்பகுதியில் வெளிச்சமின்றி சைக்கிள் செலுத்துவோர். சைக்கிள்களில் கூட்டம்கூட்டமாகச் செல்வோர் ஆகியோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இந்த வகையில் சுன்னகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி சுகுணேந்திரன் பலரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். (உ)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கன் இ செல்லையா சி சிவநேசன் செயலாளர்: சி கணேசவேல் உப செயலாளர்; அ. தற்பரானந்தன் பொருளாளர்: சு கிருஷ்ணர் மற்றும் எட்டு நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர் [ஈ[

### காந்தி ச. ச. நிலையம்

[அரியாலை]

அரியாலை மேற்கு காந்தி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு த இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொன் தேவதான் உப தலைவர்: சி சந்திரமோகன் செயலாளர்: ப ஜீவநாதன் உப செயலாளர்: மு புவனேஸ்வரன் பொருளாளர்: பொன் பரமநாதன் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர். [ஈ]

## சங்கச் செய்திகள்

### வலி. மேற்கு ச. ச. நி. சமாசம்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. ப. கிருஷ்ணசாமி உட்பட பலர் சனசமூக நிலையங்களின் சேவைகள்பற்றி எடுத்துரைத்தனர்.

சமாசத்தின் புதிய செயற்குழுவினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்; க சிவஸ்கந்தா உப தலைவர்: மு சிவராசா காரியதரிசி: கி தாமோதரம்பிள்ளை உப காரியதரிசி: சி வரதராசா தனதிகாரி: சி யோகராசா நிர்வாகசபை உறுப்பினர்கள் வி சிற்றம்பலம் மு கதிர்காமநாதன் க சுப்பிரமணியம் த நவரத்தினம் ந கலாநிதி ம சற்குணசிங்கம் [ஈ]

### மறுமலர்ச்சி மன்றம்

[வட்டுக்கோட்டை]

காரைநகர் மக்கள் மறுமலர்ச்சி மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. எஸ். கனகரட்ணம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: என் கனகரட்ணம் உப தலைவர்: என் தியாகராசா செயலாளா: ஏ பேரம்பலம் உப செயலாளர் ஐ பரம்சோதி பொருளாளர் பி கணேசன் (ஈ)

### மாதர்முன்னேற்ற சங்கம்

[புலோலி]

புலோலி கிழக்கு மாதர் முன்னேற்றச் சங்கக் கூட்டம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திருமதி பாய்க்கியம் பசுபதி தலைவி: திருமதி அன்னம்மா மார்க்கண்டு உப தலைவி: செல்வி செல்லையா சந்திரா செயலாளர்; செல்வி கமலா சின்னர் உப செயலாளர்: திருமதி ஐ தவமணி பொருளாளர்: திருமதி நவமணி தம்பிஐயா கணக்காய்வாளர்: செல்வி ஜீ நாராயணன்

மேலும் ஐந்து உத்தியோகத்தர்கள் வட்டாரப் பொறுப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். [ஈ]

### விவசாயிகள் சங்கம்

[கிளிநொச்சி]

தலைவர்: மூ கேதீஸ்வரன் உப தலைவர்; தெய்வேந்திரம் செயலாளர்: இராசலிங்கம் உப செயலாளர்: முருகையா பொருளாளர்: மனோரஞ்சன் ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது (ஈ)

### கந்தரோடை கி. அ. சங்கம்

[யாழ்ப்பாணம்]

கந்தரோடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சாம். வடிவேல் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; மா நடராசா உப தலைவர்கள்: சி சிவமோ

(4-ம் கலம் பார்க்க)



## இன்று சூரசம்காரம்

# ஆறுமுகமானபொருள் நீயருளல் வேண்

சூரசங்கார தினமாகிய இன் று, இச்சங்காரத்துக்கு முக்கியமான முருகஸ்தலமாகிய திருச்செந்தூரைப் பற்றி 'திருச்செந்தூர் முருகன் தரிசன மாலே', 'திருச்செந்தூர் இலே விபூதி மகிமை' என்னும் இரு வெளியீடுகளிலிருந்து முருகன் அடியார்கள் அறிந்துய்யும்பொருட்டுச் சில பிரதான பகுதிகளைக் கீழே தருகிறோம்.

தொகுப்பு: செ. இரத்தினசபாபதி

''பூம்பொழில் சூழும் திருச்செந்தூர், புராதன வளம்பதி. அங்கு சென்று பக்தகோடிகள் முருகப்பெருமானை உண்மைத் தெய்வமெனக் கொண்டாடி உள்ளம் உவந்து வழிபாடு புரிகின்றனர் என்பது வெள்ளிடைமலே. அவன் கோயில் கொண்டருளிய ஆறுதாரத் தலங்களில் திருச்செந்தூர் பிரசித்திவாய்ந்தது. செயந்திபுரம், திருச்சீரலைவாய், சந்தனுசலம், செந்திலம்பதி என்பதும் இத்தலத்தின் பாரிய நாமங்களாகும்.

சூரபன்மனுதியரால் அல்லலுற்ற அமரர்கட்கு அபயமளித்ததும், வீரவாகுதேவரை சூரபன்மனிடம் தூது அனுப்பியதும், பின்பு பூதசேனு வீரர்கள் சூழக் கடல்கடந்து சென்று சூரசங்காரம் புரிந்து அமரர் சிறைமீட்டித் திரும்பி வந்து கோயில்கொண்டருளியதும், துன்பம் நீங்கி இன்பம் அடைந்த பிரமேந்திரராதிகளாகிய தேவர்கள் பேருவகை கொண்டு பண்புடன் செய்த பூசனையை அன்புடன் ஏற்றருளியதும், வீரவாகு தேவருக்கு விஸ்வரூப தெரிசனங் காட்டியதும், தேவகுஞ்சரி சிவலிங்க பூசைசெய்து சித்தியடைந்ததும், பிரமதேவருக்கு வரமளித்ததும், வள்ளியம்மையின் திருமணக்கோலமும் இத்தலத்தில் நிகழ்ந்த முக்கிய திருவிளேயாடல்களாகும்.

இக்கலியுகத்திலுங்கூட அருட்புலமை வாய்ந்த அடியார்களாகிய நக்கீரர், அருணகிரிநாதர் முதலியவர்களின் பாடல்களை ஏற்றருளியதும், ஐந்து வயதுவரை ஊமையாயிருந்த குமரகுருபரரை ஆட்கொண்டு கந்தர்கலிவெண்பா பாடுகவென்று அருள்புரிந்ததும், பகழிக்கூத்தர் என்னும் ஓர் மெய்யன்பர், பிள்ளைத் தமிழாகிய பிரபந்தம்பாடி வெகுகாலமாகத் தம்மைப் பீடித்திருந்த குன்மநோய் நீங்கப்பெற்றதும், கல்விஞானமே சற்றுமில்லாத ஆலயமடப்பள்ளிச்சுயம்பாகி வென்றிமாலே

ஐஸ்வரியம், வீரியம், புகழ்' திரு, ஞானம், வைராக்கியம் என்னும் அறுகுணங்களே ஆறுமுகங்களாகவும், பிரணவமே மயில்வாகன பீடமாகவும், இச்சை' கிரியை, ஞானம் என்னும் முச்சக்திகளே வள்ளி தெய்வயானை, வேலாயுதமாகவும் கொண்டு விளங்குகின்ற ஐயனைத் தடுத்தாட்கொண்டு தலப்புராணம் பாடும்படி கலாவிநோதம் . புரிந்ததும் செந்திலாதிபன் திருவிளையாடல்களேயாம். சன்மார்க்க முறைகொண்டு திரிகரணசுத்தியுடன் தம்மைச் சரணடைந்து துதிக்கும் பக்தர்களுக்கு அவரவர் அன்பிற்கிசைந்தவாறு கருணையங்கடலாகிய கந்தப்பெருமான் அநுக்ரகம் புரிகின்ருரென்பது இற்றைக்கும் அத்தலத்தில் பிரத்யட்சப் பிரமாணமாய் நிகழ்ந்துவரும் அற்புத லீலைகளாகும்.

செந்திற்கடவுளின் திருவருட் செல்வம் படைத்த திரிசுதந்திரரென்னும் ஈராயிரம் அந்தணமுனிவர் மரபிற்றேன்றிய பிரமண்யங்களாகிய அர்ச்சகர்கள் ஆண்டவனுக்குப் பரம் பரையாக மிகவும் பக்திவிநயமுடன் ஆசார அபிஷேக பூசாரவுபசார நிவேதனுர்ச்சனைகள் புரிந்து பக்தர்கட்கு இனிது முகமலர்ந்து உவகையுடன் இலே, விபூதி முதலிய பிரசாதமளித்துவரும் இப்பெருமை இத்தலத்தின் தெய்வசாநித்தியத்தையே மென்மேலும் விளங்கச்செய்வதாகும்.''

—திருச்செந்தூர் முருகன் தரிசனமாலே.

### திருச்செந்தில் இலேவிபூதி மகிமை

சகல வேதங்களின் கருந்தாவாகிய செந்திற்பிரான், ஆணவம், கன்மம், மாயையாகப் பிரதிபலித்த சூரபன்மன், அவன் தம்பிமார் சிங்கமுகன். யானைமுகன் ஆகிய அசுரர்

களை வ...
அலேகள் ...
யடையும்...
திவினைக...
என்பதை...
வன்போ...
யாண்டி, ...
திருச்செ...
மான
அமர்ந்து...
செங்கோ...
லோகங்க...
ராஜனுக...
பத்தில், ...
மையைப்...
வேதங்க...
அந்தக் கு...
மகிமை...
மரங்க...
தோற்ற...

ஆக இ...
இலேகளு...
தியை உ...
விசாகனு...
கம் செய்...
பன்னீர் ...
பந்தப்பட...
வேத ம...
கிறது.


# மெர்க்கன்டைல் கிறெடிட் ...

## மகிழ்வுடன் அறியத்தரும் கவ...

### வருட இறுதி / வருட ஆர...

# சேமிப்பு ஊக்குவிப்பு 'போன...

### அது வழங்குபவை:-

அக்டோபர் 15-ம் திகதியிலிருந்து 1979 ஜனவரி 15-ம் திகதிவரை ரூபா 2500க்கும் குறையாத 2 வருட வைப்புக் கணக்கை அவர்களுடன் ஆரம்பிப்போருக்கு 6% - 8% வரையிலான ஊக்குவிப்பு போனஸ்.

தற்பொழுது 2 வருட வைப்புக்களுக்கு வழங்கப்படும் வழமையான உயரிய 15% வீத வட்டியுடன் மேலதிகமாகச் செலுத்தப்படுவதே இந்த ஊக்குவிப்பு போனசாகும்.

இதன்மூலம் வைப்பாளர் தமது வைப்புக்களுக்கு வட்டியும் போனசுமாக 19% வரையிலான வருமானத்தை மாதாந்தம் பெற்று மகிழலாம்.

வங்கியைப் போன்ற உறுதியும், உத்தரவாதமுமுள்ள மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டைவிட வேறு எந்தவொரு நிதி நிறுவனமும் இதுபோன்ற உயரிய வட்டி வீதத்தை சேமிப்பு வைப்புக்களுக்கென வழங்குவதில்லை,

அடுத்த மூன்று மாதங்களுள் வருடாந்த 'போனஸ்' லாபப் பங்கு, மற்றும் தொகைச் செலுத்தற்பணம் முதலியன பெற்று, அவற்றைப் புதுவருட முதலீடாக்கப் பாதுகாப்பான இடம் தேடுவோரை மனதில் வைத்துத் தயாரிக்கப்பட்டதே இத் திட்டமாகும்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையில் பெரிய உறுதிவாய்ந்த ஓர் நிதி நிறுவனமாகும். அவ்வாறே உங்கள் பணத்திற்கும் உறுதிவாய்ந்த உயரிய பாதுகாப்பினை இது நல்கிறது.

8000 க்கும் அதிகமான வைப்பாளருடன் 7 கோடி ரூபாவைச் சேமிப்பு வைப்பாகத் தன்னுள் அடக்கியுள்ளது. இது வேறு எந்தவொரு நிதி நிறுவனமும் அனுபவிக்காத பொது மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாகும்.

படுத்...
வழிய்...
ஒன்...

# வேண்டும்

களை வதைத்துவிட்டு, கடல் அலைகள் அழிவதுபோல் தன்னையடையும், மானிடர்களின் தீவினைகளும் அழிந்துவிடும் என்பதை விளக்க நின்றவன்போல், கடற்கரையாண்டி, ஜயந்திபுரம் என்ற திருச்செந்தூரில் நவரத்ன மயமான அரியாசனத்தில் அமர்ந்துகொண்டு, தர்பாரில் செங்கோல் பிடித்து, சர்வலோகங்களுக்கும் ராஜாதிராஜனுக விளங்கிவரும் சந்தர்ப்பத்தில், அவருடைய பெருமையைப் போதிக்கின்ற சகல வேதங்களும், ஒன்றுசேர்ந்து, அந்தக் குமரக்கடவுளினுடைய மகிமையை விளக்க, பன்னீர் மரங்களாக இத்தலத்தில் தோற்றங் கொண்டுள்ளன.

ஆக இப்பன்னீர் மரங்களின் இலைகளும், வேத மந்திர சக்தியை உடையனவாயுள்ளன. விசாகனுக்கு விபூதி அபிஷேகம் செய்து அந்த விபூதியைப் பன்னீர் இலையில் வைத்து சம்பந்தப்படுத்துவதால், அந்நீறு வேத மந்திரசக்தியைப் பெறுகிறது.

இவ்வாறு சக்திபெற்ற இலை விபூதியைககண்ட மாத்திரத்தில சகலவித ரோகங்களும், பூதபைசாசங்களும் வெகு தூரத்திற்கப்பால் ஓடி விலகி விடுகின்றன.

''ஓம் சரவண பவ என்னும்
ஒரு மந்திரம்
சக்தி யெல்லாம் தரும்
திரு மந்திரம்
அறம் பொருள் இன்பம்
இவை அரு மந்திரம்
ஆறுமுகம்மாகி வரும் பெரு
மந்திரம்''

## வட்டு. கிளை

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. க. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு:

தலைவர்: பொ. கந்தசாமி, (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) செயலாளர்: க. பரமலிங்கம், பொருளாளர்: எஸ். முருகேசு, உபதலைவர்கள்: சு. பொன்னம்பலம், எஸ். செல்லத்துரை, உபசெயலாளர்கள்: வி. சுப்பிரமணியம், ம. தனராசசிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினராக ஒனபது பேர் தெரிவு செய்யப் பட்டனர். (உ)

# "கிராமப்புற மாணவர்கள் நகரத்தவர்க்கு சளைத்தவர்கள் அல்ல"

## — கிளிநொச்சி எம். பி.

(கிளிநொச்சி)

''கிராமப்புற மாணவர்கள் எவருக்கும் சளைத்தவர்களல்லர். நகர்ப்புற மாணவர்களுக்கு அவர்கள் நிகரானவர்கள். கிராமப்புற மாணவர்களுக்கு ஒருவாய்பைத் தந்து பார்த்தால் அவர்கள் திறமை புரியும்'' என்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையில் கிளிநொச்சி எம். பி. வி. ஆனந்தசங்கரி தமது உரையில் குறிப்பிட்டார்.

மேலும் தமது உரையில் அவர் கூறியதாவது:

கிராமப்புறப் பாடசாலைகளைப் பட்டணப்புறத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவதில் பயனில்லை கிளிநொச்சியில் விஞ்ஞான ஆய்வுகூட வசதியுள்ள இந்த மகாவித்தியாலயத்தில் வஞ்ஞான ஆய்வுகூடமிருந்தும் விஞ்ஞான ஆசிரியரில்லை. க. பொ. த. உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கு அதேதகைமை உடைய ஆசிரியர்தான் கற்பித்து வருகின்றார்.

இந்த லட்சணத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் சிலர் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளிவிடுவது ஏன் என்று புரியவில்லை. எதுவித பயிற்சி வசதியும் அற்ற இப் பாடசாலை மாணவன் ஒருவன் யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற போட்டியில் முதலாவது பரிசைத்தட்டிக் கொண்டது மட்டுமின்றி அகில இலங்கை ரீதியாகக் கண்டியில் நடைபெற்ற போட்டியில் நாலாவது இடமும் பெற்றிருக்கின்றான். அதே மாணவனுக்குப் பட்டணப்புறப் பாடசாலைகளுக்குள்ள வசதிகளும் பயிற்சிகளும் இருந்திருந்தால் அவனது நிலைமை என்ன என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

விளையாட்டில் மட்டுமல்ல, கல்வியிலும் வாய்ப்போ வசதிகளோ அற்ற துர்ப்பாக்கியமான நிலைமையில் மாணவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப்பிரதேசம் எம்முடையது. இதை அபிவிருத்திசெய்யத்தான் வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்கின்றேன். இம்மகாவித்தியாலயம் கிளிநொச்சியின் பெயரைக் கொண்டு அமைந்த பாடசாலை மட்டுமல்ல! கிளிநொச்சியின் முதல் தரமான பாடசாலையும்ஆகும். இங்குள்ள ஆசிரியர்களுக்குப் பலவித கஷ்டங்கள், கரைச்சல்கள் இருந்தும் அவர்கள் தியாக உணர்வோடு இங்கு கடமையாற்றுகின்றார்கள். அவர்களுக்குள்ளகஷ்டங்களைக் கூடிய விரைவில் தீர்த்துவைப்பேன்.

சாதாரண ஆசிரியர்களின் ஆலோசனையுடன் இங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ள இம்மண்டபம் கிளிநொச்சித்தொகுதியிலே முதல்தரமானதாயுள்ளது. கட்டிடக்கலைஞர்களாலும் இஞ்சினியர்களாலும் கட்டப்பட்ட நகரமண்டபத்தை இம்மண்டபம் கேலி செய்கின்ற அளவிற்கு இம் மண்டபம் விலாசமாகவும் ஆயிரக்கணக்கானவர்களை உள்ளடக்கக்கூடியதாகவும் அமைந்திருக்கின்றது. இது குறித்து நாங்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டும்'' என்றார்.

வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குத் திருமதி ஆனந்தசங்கரி பரிசில்களை வழங்கினார். (உ)

## மக்கள் அவதி

[கோண்டாவில்]

பெருமழை காரணமாகத் தலையாளியில் உள்ள மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகினர் மழைகாலத்தில் அப்பகுதியில் வாழும் குடும்பங்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாயிருக்கிறது

வெள்ளம், இப்பகுதியில் வாழும் மக்களின் வீடுகளுக்குள் புகுந்துவிடுவதே இவ்வாறு மக்கள் அவதிப்படுவதற்குக் காரணமாகவிருக்கின்றது.

இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வரும் வெள்ளம் இக்கிராமத்தினூடாகத்தான் கடலை நோக்கிப் பாய்கிறது. ஆனல் இவ்வெள்ளம் போகும் குளம் மறைந்ததும் அதே நேரத்தில் மதகுகள் நீர் போகாதவண்ணம் தடை செய்யப்பட்டதாலும் வெள்ளம் இக்கிராமத்திற்குள் புகுந்து மக்களைத் துன்பத்திற்குள்ளாக்குகிறது.

இவ்வாறு இப்பகுதி மக்கள் ஒவ்வொரு வருடமும் துன்பத்திற்குள்ளாகின்றனர். இது பற்றிக் கிராமசபையிடம் இப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். ஆனல் மழை தொடங்கியும் இன்றுவரை கிராமசபை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இக்குறைபாட்டை மக்கள் நல்லூர் எம். பி.யிடமும் தெரிவித்துள்ளனராம். [உ]

## ஆசிரியரின் சேவைக்குப் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''உலகில் நற்பிரஜைகளையும் மேதாவிகளையும் உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே. பலதரப்பட்ட குணதிசயங்கள் உள்ள மாணவர்களை ஒருமுகப்படுத்தி கற்பிக்கும் சக்தியினல் அவர்களைத் தம்வசப்படுத்தி பரீட்சையில் சித்தி எய்தவைத்து பெற்றோர்களிடத்தில் நன்மதிப்பைப் பெறுவதானல் அது பாராட்டிற்குரியதொன்றாகும். இந்த நிலையிலேதான் கடமையுணர்ச்சியும் கட்டுப்பாடும் ஒன்றிணைந்து பணிபுரிந்து பாடசாலையிலும் இக்கிராமத்திலும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார் திருமதி மாக்கிறற் அலோசியஸ்.''

இவ்வாறு அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் திரு. சு. நல்லையா 15 வருடங்களாக மேற்படி பாடசாலையில் பணிபுரிந்து இளைப்பாறும் ஆசிரியை திருமதி மாக்கிறற் அலோசியசின் சேவைநலன் பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் கூறினர்

வண பிதா. பி அலோசியஸ் தலைமையில் இவ்வைபவம் நிகழ்ந்தது. மற்றும் பலரும் பேசினர், [ச. நி]

## 'ஆடம்பர வாழ்வு அவசியமில்லை'

### --கு. விநோதன்

[சங்கானை]

''இன்று நாட்டில் கிடைக்காத பொருட்களே இல்லை. வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதி பற்றியும் விற்பனை பற்றியுமே விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்நிலை எமது நாட்டை எங்கு கொண்டுசெல்லுமென்பதை நாம் சிந்திக்கவேண்டும். இன்று எமக்குத் தேவை ஆடம்பரக் கார்களா அல்லது அரை வயிற்றுச் சாப்பாடா? ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதியால் வசதியுள்ளவர்கள் தமது வசதிகளை மேலும் பெருக்குகின்றனர். ஆனல் வறியவாகள் மேலும் வாடுகின்றனர்.''

இவ்வாறு சண்டிலிப்பாய் ஹொலிவூட் விளையாட்டுக் கழகத்தின் 19வது ஆண்டு விழாவில் பேசிய திரு. கு. விநோதன் குறிப்பிட்டார்.

திரு. நா. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு, விநோதன் மேலும் பேசியதாவது-

''கடந்த அரசாங்க காலத்தில் மக்களுக்குச் சில கஷ்டங்கள் இருந்தனவென்பதை நாம் மறுக்கமுடியாது. ஆனல நமது நாட்டுப் பணம் நமது நாட்டிலேயே இருந்த காரணத்தினல் நமது பொருளாதாரம் ஸ்திரத்தன்மையிலிருந்தது. ஆனல் இன்று இறக்குமதி என்ற பெயரால் நமது பணம் வெளிநாட்டிற்குக் கொள்ளைபோகிறது'' என்றார். (உ)

ட் லிமிட்டெட்

கவர்ச்சி மிக்க

. ஆரம்ப

பானஸ்' திட்டம்

எனவே உங்களை நாடிவரும் இவ்வரிய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி மேலதிகமாகக் கிடைக்கும் உங்கள் பணத்தைச் சிறந்த வழியிற் பயனுக்குங்கள். மனங்கவர் வட்டியும், கூடவே 'போனசும்' ஒன்ருக வழங்கும் அவர்களுடன் முதலீடு செய்யுங்கள்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்



(நிதிப் பிரிவு)

51/53, ஜனதிபதி மாவத்தை
கொழும்பு -1,
தொலைபேசி: 26611-19.
அல்லது
கிளை அலுவலகங்கள்:
யாழ்ப்பாணம்: 11/8, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை: 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி: 2466
அநுராதபுரம்: 2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534
கண்டி: 901/A, பேராதனை வீதி, தொலைபேசி: 4196.

# ஜெயப்பிரகாஷர் - ஜே. ஆர். சந்திப்பு: நேபாளத்தில் அமோக வரவேற்பு

## சித்தார்த்தர்நகருக்கும் செல்வார்

பாட்ஞ, நவ. 5

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பட்ஞவில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணைச் சந்தித்து உரையாடினர்.

### நேபாளத்தில் ஜே. ஆர்.

இது இவ்வாறிருக்க ஜனதிபதி திரு. ஜெயவர்த்தன நேபாளம் சென்றடைந்துள்ளார். நேபாளமன்னருடனும் பிரதமருடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

காட்மாண்டில் அவருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஜனதிபதியை வரவேற்கும் சுலோகங்கள் வீதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. வீதிகள் இலங்கை -நேபாளக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

புத்தர் பிறந்த இடமான லும்பினிக்கும் ஜனதிபதி விஜயம்செய்யவிருந்தார்

லும்பினியில் இருந்து அவர் கபிலவஸ்து செல்வார்.

சித்தார்த்தர்நகருக்கும் அவர் செல்ல ஏற்பாடாகி இருக்கிறது. காட்மாண்ட் மாநகர சபையின் வரவேற்பு வைபவம் ஒன்றிலும் அவர் பங்குபற்றுவார்.

நேபாளத்திலுள்ள இலங்கைப் பிரஜைகளும் ஜனதிபதிக்கும் தனியான வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். [உ]

## தெய்வாதீனமாக தப்பினர்!

[யாழ்ப்பாணம்]

கடந்த வெள்ளிக்கிழமை பெய்த பெருமழையின் காரணமாக, குருநகர் துறையில் இருந்து நான்கு இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்கஆழ்கடலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் படகுகள் பழுதடைந்தபோதிலும் இருநாட்களின்பின் தெய்வாதீனமாக கரைவந்து சேர்ந்தனர். இவர்களைத் தேடிச்சென்ற வேறு படகுக்காரர்கள் இயந்திரம்பழுதடைந்த நிலையில் இரு இந்திய இழுவைக் கப்பல்காரரையும் காப்பாற்ற உதவினராம். [உ]

## விவசாயிகள் கோரிக்கை

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் பயிர்ச்செய்கை யற்றிருக்கும் தரிசு நிலங்களை முந்திரிகைச் செய்கையி லீடுபடுத்துவதற்காக முந்திரிகை செய்கை பண்ணுவோர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென இங்குள்ள விவசாயிகள் காணி விவசாய அமைச்சர், பருத்தித்துறை எம், பி. ஆகியோரிடம் கோரியுள்ளனர்.

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளில் பல ஏக்கர் மணல்தரைகள் வெறும் தரிசு நிலங்களாக இருப்பதாகவும் இந்நிலங்களை முந்திரிகை செய்வதற்குப் பயன்படுத்துவதால் கூடிய வருவாயைப் பெறலாமெனவும் இவர்கள் அக்கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். [உ]

## வீல் கப் யாருடையது?

யாழ். நல்லூர் செட்டித்தெரு வெள்ளத்தில் கொமர்ஷல் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த எஸ். எஸ். கனகலிங்கத்தினுல் கண்டெடுக்கப்பட்ட காரின் 'ஸ்டார்' வீல்கப் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவா தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## விஞ்ஞான ஆசிரியர்க்கு சேவைக்காலப்பயிற்சி

### யாழ். கல்விப் பகுதி ஏற்பாடு

(புலோலி)

வட பிரதேச விஞ்ஞான ஆசிரியர்களுக்கு சேவைக்காலப்பயிற்சி ஒன்றினை கல்வி அமைச்சு நடாத்தவுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் வடமாநிலக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இம்மாதம் 7-ந் திகதி தொடக்கம், 12-ம் திகதிவரை தொண்டமானுறு வெளிக்கள ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவிருக்கும் இச் சேவைக் காலப் பயிற்சி, மன்னுர், வவனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உயர்தர வகுப்பிற்கு கல்வி கற்பிக்கும ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள்.

இச்சேவைப் பயிற்சியால் உயர் வகுப்பில் தாவரவியல் விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற பாடங்களைக் கற்போர் சிறந்தபயனடைவர் என எதிர்பார்க்கப்படுறது. (உ)

## பெண்ணுக்கு 250ரூபா அபராதம்

(புலோலி)

சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற பெண்ணுக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் 250ரூபா அபராதம் விதித்தார்.

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரம் பெண் அலங்காரம் என்பவரே மேற்கண்டவாறு சட்டவிரோதமாகச் சாராயம் விற்றவராகும்.

இப்பெண் முன்பும் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றது சம்பந்தமாக இதே நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டார். (க)

## வளர்முக நாடுகள் சீற்றம்

புவனஸ் அயஸ், நவ 5

வளர்ச்சியுற்ற நாடுகள் பேட்டன்டுகள், லைசன்ஸ், தொழில் நுணுக்க தஸ்தாவேஜுகளை வளர்முக நாடுகளுக்கு விற்பனைசெய்யும் போது அவற்றை சார்ந்திருக்க நிர்ப்பந்தம் பிரயோகிக்கும் நோக்கத்துடன் கட்டுப்பாடு விதிகளை விதிப்பதாக இங்கு குற்றஞ் சாட்டப்பட்டது.

140 வளர்முக நாடுகள் பங்குபற்றிய ஐ. நா. தொழில் நுட்ப மகாநாட்டில் இது நிகழ்ந்தது. விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் பெறுபேறுகளை வைத்து வளர்முக நாடுகளைச் சுரண்ட எத்தனிப்பது கண்டிக்கப்பட்டது. தொழில்நுட்ப ஞானத்தை விற்பனைசெய்து 1977ம் ஆண்டில் மாத்திரம் அமெரிக்கா 300 கோடி டாலர்களை சுருட்டிக்கொண்டதாக கூறப்பட்டது. இதனுல் பெருவாரியாக வளர்முக நாடுகளே பாதிக்கப்பட்டன,

வளர்ச்சயுற்ற நாடுகள் ''மூளைசாலிகளை'' ஈர்த்தெடுப்பதும் ஆலோசிக்கப்பட்டது. 1960—1975 ஆண்டுகளில் 14,000 மூளைசாலிகளை அமெரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலிருந்து 'திருடி'க்கொண்டதாகவும், இதனுல் அவர்களை பயிற்சியளிக்க செலவான 300 கோடி டாலர் நஷ்டமானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

## 'சதாத்தின் போக்கு முழு அரபுநாடுகளுக்குமே ஆபத்து'

### ஈராக் அதிபர் தாக்கு

பாக்தாத், நவ. 5

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பான போக்கு அரபுநாடுகள் முழுவதற்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று ஈராக் அதிபர் பக்கிர் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு பற்றிய கேம்ப் டேவிட் உடன்பாட்டை எதிர்க்கும் வகையில் அரபுநாடுகள பாக்தாத்தில் உச்சிமாநாடு நடத்திவருகின்றது.

இம் மாநாட்டில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு சொன்னர்.

இப் பிரச்னையில் பங்குபற்றும் உரிமை சதாத்திற்கு மட்டும் உரியதல்ல எனறும் அவர் சொன்னர், (உ)

## போக்குவரத்துச் சேவை சீராகிறது

[புலோலி]

பருத்தித்துறை தொகுதியின் கிழக்குப் பகுதிகளின் போக்குவரத்து வசதிகள் சீர் செய்யப்பட்டுவருகின்றன.

இப் பகுதியின் போக்குவரத்து வசதிகள் இதுகால வரை கவனிப்பாரற்ற நிலையில் இருந்துவந்ததாகவும் இப்போது இவை சீர்செய்யப்படுவதனுல் தாம் பெரிதும் நன்மையடைய இருப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது குடாரப்பு பகுதியிலிருந்து சுமார் 6 மைல் தூரம் வரையிலான வீதிகள் முற்றுமுழுதாகத் திருத்தப்பட்டுவருகின்றன இதனல் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினல் நடாத்தப்பட்டு வரும் தாளையடி ஆழியவளை பஸ்சேவைகள் தற்காலிகமாக தவிர்க்க முடியாதபடியால் குடாரப்புவுடன் நிறுத்தப்பட்டுள்ளது வேலைகள் முடிவுற்றதும் பழையபடி பஸ் சேவைகள் வழக்கம்போல நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஆழியவளை உடுத்துறை, தாளையடி, மருதங்கேணி போன்ற கிராம மக்களின் நன்மை கருதி பருத்தித்துறை இ. போ. ச டிப்போவினர் தற்காலிகமாக பருத்தித்துறையிலிருந்து ஆரம்பித்து கொடிகாமம், டனை ஊடாக தாளையடிக்கு ஒரு பஸ்சேவை நடாத்தப்படவேண்டுமெனக் கோரி தாளையடி நலன்புரிச் சங்கம் பருத்தித்துறை இ போ. ச டிப்போ சுப்பிரிண்டனை அவசரத்தந்தி மூலம் கேட்டுள்ளது. [உ]

## உறவும் ஒற்றுமையும் வளர்வதற்கு வழி

### எம். பி. விளக்கம்

(புலோலி)

''எமது பாரம்பரிய சமய, கலை, கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாப்பது எமது கடமையாகும் இதன் மூலம் மக்கள் மத்தியில சமூக உறவையும்,ஒருமைப்பாட்டையும் வளர்க்க முடியும். எனவே சகல பாடசாலைகளிலும் இவைபோன்ற சமய, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.''

மேற்கண்டவாறு, வெற்றிலைக்கேணி கனிஷ்டமகாவித்யாலயத்தில் நடைபெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை எம். பி திரு. க துரைரத்தினம் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இக் கலைவிழாவில் எம்.பி தொடர்ந்து பேசுகையில் வெற்றிலைக் கேணிக் கிராமம் ஒரு கஷ்டப் பிரதேசமாக இருந்தபோதிலும் இங்குள்ள மக்கள் சிறந்த உற்சாகமுடையவர்களாக இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவர்களின் உற்சாகத்திற்கும், ஒற்றுமைக்குமேற்ப இக்கிராமம் நன்கு முன்னேற்றமடைய முடியும். இதனுலே தான் இந்தப் பாடசாலைக்கு ஒரு இளம் அதிபருடன்கூடிய இளம் ஆசிரியர் குழுவையும் அனுப்பி வைத்துள்ளேன். இவர்கள் யாவரினதும் ஒற்றுமையுடன் இந்தப் பாடசாலையினதும், கிராமத்தினதும் முன்னேற்றத்திற்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளேன்'' என்ருர்.

பாடசாலை மாணவர்களின் இயல், இசை நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ)

## தற்காலிக வேலைநீக்கம்

[புலோலி[

பருத்தித்துறை, நகரசபை தந்திக்கம்பி திருட்டு சம்பந்தமாக இன்னெரு நகரசபை ஊழியரும் சந்தேகத்தின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபரும் தற்காலிகவேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். [அ[

## குடைசாய்ந்தன

(நாயன்மாகட்டு)

கடும் மழைபெய்ததன் காரணமாக ஆனையிறவு பாலத்துக்கு அண்மையில் இரண்டு லொறிகள் பாதையைவிட்டு விலகி குடைசாய்ந்தன. [இ]

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 20 ந் திகதி

திங்கட்கிழமை

(6-11-78)

**மேடம்:-** பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாறனின் கணை தாக்கும், புத்திரர் மூலம் மகிழ்ச்சிக்கிடமுண்டு, மனை வாழ்க்கையிலும் மகிழ்ச்சி தென்படும்.

**இடபம்:** சிறிய விடயம் கூட சிரபமாகத் தோன்றும், உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும்,வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:-** களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும், நீண்ட நாள் பகை நிவர்த்தியாவதற்கு இடமுண்டு, மதிப்பு உயரும், நல்ல நாள்.

**கடகம்:-** ஏமாற்றம் தாக்கும், எதிலும் தயக்கநிலை தென படும், செய்தொழில் மூலம் நஷ்டமேற்படும், விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும்.

**சிங்கம்:-** புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும், கொண்ட கொள்கையில் அதிக உறுதிப்பாடு தென்படும், பிதாவழி ஆதரவும் உண்டு.

**கன்னி:-** புதிய தொழில்களை உருவாக்குவீர்கள், தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும், இடமாற்றமும் ஏற்படலாம்.

**துலாம்:** புதுமையான செய்தியொன்று கிடைக்கலாம், பொதுமக்களின் ஆதரவும், பொருள் வரவிற்கும் இடமுண்டு, வெற்றித்தினம்.

**விருச்சிகம்:-** தொழில் துறையில் நஷ்டத்துற்கிடமுண்டு, சிந்தனை புதிர்போடும், பெரியவர்களைப் பகைத்துக் கொள்வதற்கு இடமுண்டு. நிதானம் வேண்டும்.

**தனுசு:-** ஆசை அலைகள் மோதும், வாழ்க்கையில் நிம்பதியற்ற நிலை தென்படும், மன அடக்கம் விரும்பத்தக்கது.

**மகரம்:-** குடும்பநலனில் புதிய உற்சாகம் பிறக்கும், உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும், வசீகரப் பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

**கும்பம்:-** பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள், இதனுல் விடரீதங்கள் தோன்றக் கூடும், முன்னெச்சரிக்கை நன்று.

**மீனம்:-** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும், தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு. நல்ல நாள். முன்னேற்றத்திற்கிடமுண்டு.

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

## சத்தியேந்திரா பதவியேற்ருர்

(கொழும்பு)

தொழில் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட திரு. என். சத்தியேந்திராதமது பதவியையேற்றுக்கொண்டார்

திரு. என். சத்தியேந்திரா பிரபல சட்டநிபுணரும் தொழில் சட்டவாக்கதுறையில் பிரபல்யம் பெற்றவருமாவார்.

## விமானத் தபாலுக்கு கட்டுப்பாடு

[உடுப்பிட்டி[

கரவெட்டித் தபாற்கந்தோரில் கடந்த சில நாட்களாக விமானக் கடித உறைக்குப் பெரும்தட்டுப்பாடுநிலவுவதால் பொதுமக்கள் பெருங்கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். ]க]

## தோற்பொருள் திருட்டு

(கொழும்பு)

பேலியகொடைப் பொலிஸ் பகுதியில் உள்ள தோல் பொருள் உற்பத்தி நிலையத்தில் இருந்து 23,000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (உ)

Rio (Jaffna) Phone: 7607
Dyli 4 Shows
Great Scout
Family Entertainment

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜய
நல்லநேரம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு

## 'கஜூர்ஞபீச்' அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலுள்ள பிரசித்தி பெற்ற உல்லாசப் பிரயாண ஸ்தலமான கஜூர்ஞ பீச்சை அபிவிருத்தி செய்யுமுகமாக வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 7 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இக் கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள சவுக்கு மரங்களைப் பல விழாக்களுக்கு அலங்கரிப்பதற்காக வெட்டிச் செல்வதால் இப் பகுதியின் அழகு பாதிக்கப்படுகிறது எனவே மீண்டும் இங்கு புதிய சவுக்கு மரங்களை நடுவதற்கு வனபரிபாலன இலாகாவின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் வட்டு எம். பி. திட்டமிட்டுள்ளார். மேலும் இப்பகுதியில் களவாக மணல் ஏற்றிச் செல்வதையும் தடுக்கவும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. (அ)

ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏ மா ளி க ள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
த னி ப் பி ற வி
(புத்தம் புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 4-15, 7-00, 9-30.
Lorella Deluca...George Marshall...Anita Ekberg
in
Sign of The Gladiators
Adventure Thrill—Scope—Colour

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பாக்கியலட்சுமி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

போன்: 466
வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தின்சரி 4 காட்சிகள்
2-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அ நு ரா க ம்

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறுன்.
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன் (ஈஸ்ட்மன் கலர்)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
TEN G MEN (Action Film)

சமத்கார பிலிம்ஸ்

## அநுராகம்

மென்மையான உணர்வுகள் கொண்ட ஓவியன் ராஜா. அவன் காதலுக்காக ஏங்கும் அழகுசுந்தரி. அவனுடைய முறைப்பெண் நளினி ஆனல் ராஜா... மலையகத்து மாதரசி வசந்தியின் எழில் உருவைக் கடதாசியில் பதித்துவிட முனைந்து இறுதியில் தன் இதயத்திலேயே அவளைப் பதித்துவிடுகிறுன். இயற்கை வனப்பின் மடியில் ராஜா-வசந்தியின் உள்ளங்கள் சங்கமிக்கின்றன. வசந்தியின் முறைமாப்பிள்ளை, ராஜாவின் காதலை அவன் தந்தைக்குத் தெரிவித்துவிடுகிறுன், அவர் ராஜாவை வசந்தியிடமிருந்து பிரித்துச் சென்றுவிடுகிறுர். ராஜாவின் அன்பின் சின்னந்தான் வசந்தி பெற்றெடுத்த குழந்தை கண்ணன்.

வசந்தி மறுபடியும் ராஜாவைச் சந்திப்பாளா...? அவர்கள் காதல் நிறைவேறுமா...? ராஜாவின் முறைப்பெண் நளினி...? அடுத்து வசந்தியின் முறை மாப்பிள்ளை செய்யப் போகும் சூழ்ச்சி...?

விறுவிறுப்பையும், நம்பக்கூடிய சம்பவங்களையும், 'எண்ணங்களாலே இறைவன் தானே', 'உன்னை வரைந்தேனே' ஆகிய செவிக்கினிய கீதங்களையும் நமக்கு வழங்கும் படம் சமத்கார பிலிம்ஸ் 'அநுராகம்'.

கலைஞர்களுக்குப் புகழ்தரும் கட்டங்கள் பல இப்படத்தில் உள்ளன. தன் உழைப்பைத் திரட்டிவடித்த ஓவியம். அதுவும் தன் மனங் கவர்ந்தவளது வடிவம் —ஒரு முரடன் கையால் நாசமாக்கப்பட்டதும் அந்த ஏக்கத்தை உணர்ச்சிச் சாறுகப் பிழிந்து முகத்தில் காட்டுகிறுரே, கதாநாயகன் எம். என். சிவராம், அந்த இடத்தைக் குறிப்பிடுவதா...? பிள்ளைப் பாசத்தை 'ஆ...ஓ' என்று கூச்சலிட்டு முத்தமாரி பொழிந்து 'மாமூல்' பாணிபோல் செய்யாமல் அமைதியாக நடிக்கிறுரே சிவராம். அதைச் சொல்வதா...? காதலனைப் பிரிந்ததும் தாரைதாரையாக 'கிளிசரின்' கண்ணீர் வடிக்காமல் ஒரு கோடி மட்டும் காட்டி நடிக்கிறுரே கதாநாயகி சந்திரகலா. அதைப் புகழ்வதா...? மலையகத்து வனப்பைக் கண்கவர ஒளிப்பதிவு செய்திருக்கும் ஜோன் யோகராஜைப் பாராட்டவா? அல்லது ராஜாவும் வசந்தியும் கூடியதும் தன் நடிப்பை வெளிப்படுத்தக் கண்களையும், உதடுகளையும் அஜேஜா அசைக்கும் நளினத்தை எடுத்துரைக்கவா...?

நீரோட்டம் போன்ற திரைக்கதையையும், சிறந்த டைரக்ஷனையும் படைத்திருக்கும் யசபாலித்த நாணயக்காராவின் புகழ் தமிழ்த்திரையுலகத்திலும் இன்று கொடி கட்டிப் பறக்கும் எனலாம்.

சந்திரகலாவின் 'மேக்கப்'பும் சில இடங்களில் கமெரா வில் விழும் நிழல்களும் ஒரு இடத்தில் வசன ஒலிப்பதிவும் படத்திற்குத் திருஷ்டிபரிகாரமாக அமைகின்றன.

சரத் தசநாயக்காவின் இசை, சண்டைக் காட்சிகளுக்குப் பொருந்தாவிட்டாலும் பல இடங்களில் இனிமையாக இருக்கிறது.

எம். என். சிவராம், சந்திரகலா, அஜேஜாவுடன் வில்லன் விஸ்வநாதராஜாவுக்கும் விசாலமான வருங்காலம் உண்டு.

'அடேயப்பா... இவ்வளவு வரவேற்பா?' என்று வியக்கும் வண்ணம் யாழ்ப்பாணம் வின்ஸர் படமாளிகையில் கரகோஷங்கள்... பாராட்டுக் கூச்சல்கள். அஜேஜா தோன்றும் ஒரு காட்சியில், ஒரு தென்னிந்திய 'மார்க்கெட்' நடிகையின் பெயரைச் சொல்லி அவர் பென்ஷன் எடுக்கலாம் என்று முதல் காட்சி பார்த்த ஒரு ரசிகர் சொன்னதும் அவரைச் சுற்றிருந்தவர்கள் கைதட்டி வரவேற்றார்கள் என்ற ஒன்றே ரசிகர்களின் திருப்தியை வெளிக்காட்டுவதாய் அமைகிறது

குறிப்பு: அதிகமாகப் புகழ்வது எனக்குப் பிடிக்காத ஒன்று. ஆனல் புகழும்படி செய்துவிட்டது அநுராகம்.

---பிரேம்ப்ரியா

காங்கேசன் யங்ஸ்ரேயல்:

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 60 கழகங்கள் பங்குபற்றுகின்றன

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வடபகுதியிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 60 கழகங்கள் பங்குபற்றியுள்ளன.

இம்மாதம் 19ந் திகதி காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கும் சுற்றுப்போட்டியில் முதலாம் பிரிவில் 15 கழகங்களும், இரண்டாம் பிரிவில் 20 கழகங்களும், மூன்றும் பிரிவில் 10 கழகங்களும் பங்குபற்றியுள்ளன. அத்துடன் 7 பேர் கொண்ட முதலாம் பிரிவுப் போட்டியில் 15 கழகங்களும் பங்குபற்றியுள்ளன.

முதலாம் பிரிவுப்போட்டிகளுககு யாழ்ப்பாண உதைபந்தாட்ட நடுநிலையாளர் சங்க மத்தியஸ்தர்கள் கடமையாற்றுவார்கள். இச்சுற்றுப்போட்டியின்இறுதிஆட்டங்கம் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று மின்னொளியில் நடைபெறும்.

இச்சுற்றுப்போட்டியை திறம்பட நடத்துவதற்கான ஏற்பாடுகளை, யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழக நிர்வாகசபையினர் செய்துள்ளனர். இச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டும் சாம்பியன்கோஷ்டிகளுக்கு ஐந்து வெற்றிக்கிண்ணங்களும் ஐந்து வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விளையாட்டு வீரர் ஐவருக்கும் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படும் [உ]

### நடேஸ்வரா பிரிவுச் சாம்பியன்கள்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியின் இரண்டாம் மூன்றும் பிரிவுக்கோஷ்டியினர் எக்கல்லூரியிடமும் தோல்வியடையாமல் பிரிவுச்சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நடேஸ்வரா இரண்டாம்பிரிவுக்கோஷ்டியினர் தாம் கலந்துகொண்ட போட்டிகளில் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியை 2-0கோல்களாலும், ஒஸ்மானியாக்கல்லூரியை 5-1 கோல்களாலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியை 2-0 கோல்களாலும் வெற்றியீட்டி பிரிவுச்சாம்பியன்களாக 'பி' பிரிவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மூன்றும் பிரிவுக் கோஷ்டியினர் விக்டோறியாக் கல்லூரியை 1-0 கோல்களாலும், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியை 2-0 கோல்களாலும். ஒஸ்மானியாக்கல்லூரியை 4-1 கோல்களாலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியை 4-0 கோல்களாலும் வென்று பிரிவுச் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

### யாழ். இந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிகள் வெற்றி

[யாழ். விளையாட்டு நிருபர்]

யாழ்ப்பாணப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம், யாழ். பாடசாலைகளுக்கிடையில் கடந்த சனிக்கிழமை நடாத்திய கால்இறுதி உதைபந்தாட்டப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

முதலாவதுபோட்டியில் ஒஸ்மானியாக்கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மோதி 2-0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இதற்கு திரு. ஏ. கமலநாதன் நடுவராகக் கடமை புரிந்தார்.

இரண்டாவது போட்டியில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி விளையாடி 1-0 கோல்களால் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தை வெற்றியீட்டியது,

இப்போட்டியைக்காண பெருந்திரளான ரசிகர்கள் வந்திருந்தார்கள். கடந்த வெள்ளிக்கிழமை பெய்த மழையினுல் மைதானத்தில் சில இடங்களில் தண்ணீர் நின்றதனுல் விளையாடிய வீரர்கள் பலர் பனியில் சறுக்குவதுபோல் விழுந்துவிளையாடினுர்கள் என்பது குறிப்பிடத்தக்கவை. (உ)

### மகாஜனு வெற்றி

யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் மகஜனுக் கல்லூரி 6-0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் வெற்றியீட்டியதனுல் மகாஜனுக் கல்லூரி யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் நடாத்தும் போட்டியின் 'பி' பிரிவில் சாம்பியனுனதுடன் நவம்பர்மாதம் நடைபெறவிருக்கும் அரை இறுதிப்போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. [இ]

### மத்தியகல்லூரி வெற்றி

அராலி இந்துக்கல்லூரிக்கும் யாழ். மத்தியகல்லூரிக்கும் இடையில்நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்தியகல்லூரி 4-0 கோல்களைப்போட்டு அராலி இந்துக்கல்லூரி 3-ம் பிரிவை வெற்றியீட்டியது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்இடம் பெற்றது. இதற்கு திரு. கே. தனபாலசிங்கம் நடுவராகக் கடமைபுரிந்தார். (உ)

### யாழ்.இந்து வெற்றி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம்நடாத்தும் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள் சில பின்வருமாறு:-

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் யாழ் இந்துக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி 5-0 கோல்களால்வெற்றியீட்டியது.

### ஸ்கந்தா வெற்றி

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் யாழ். மத்தியகல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயா கல்லூரி 5-1 கோல்களால் வெற்றியீட்டியது. இதற்கு திரு. அன்ரனிப்பிள்ளை நடுவராகக்கடமையாற்றினுர்.

### யூனியன்கல்லூரி வெற்றி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றபோட்டியில் யூனியன் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி ஆரம்பமுதல் இறுதிவரை மிக விறுவிறுப்புடன் நடைபெற்றது. இதற்கு திரு. ஏ. கமலநாதன் நடுவராகக் கடமைபுரிந்தார்

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

# ஆசிரியர் பற்றுக்குறையை தீர்த்து வைக்கக்கோரிக்கை

[உடுப்பிட்டி]

''கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்குவதுடன் பௌதிக விஞ்ஞானப்பட்டதாரிஆசிரியரும், சித்திரத்தகைமை பெற்ற ஆசிரியரும் நியமிக்கப்படவேண்டியது அவசியமாகும்''.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பி உடுப்பிட்டி எம் பி திரு த இராஜலிங்கத்திற்கும், வடமாநிலக் கல்வி அதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இக்கல்லூரியில் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் பகுதிநேரச் சங்கீத ஆசிரியரை முழுநேர ஆசிரியராக நியமித்துத் தரவேண்டும்.

1966ம் ஆண்டு இக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கென அரசாங்கம் 22 பரப்புக் காணியைச் சுவீகரித்தது. ஆனல் இக்காணி விளையாட்டு மைதானத்திற்குப் போதாமல் உள்ளது. ஆதலால் கூடுதல் காணிதேவை.

கல்லூரியின் ஆழமான கிணற்றிலிருந்து நீரிறைக்கும் இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் கல்லூரிப் பிள்ளைகள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்றனர். இக்கல்லூரிக்கு மின்சாரவிநியோகம் வழங்குவதின் மூலம் இக்குறையைநிவர்த்திசெய்யலாம்

சகல வசதிகளும் கொண்ட விஞ்ஞான ஆய்வுகூடமொன்று நிறுவப்படவேண்டும்,

ஜீ சீ ஈ (உயர்தர) வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கவேண்டும.

மேற்கண்ட கோரிக்கைகள் இமமகஜரில் அடங்கியுள்ளன. [உ]

# தொழிலாளர் தெரிவில் கிளிநொச்சி புறக்கணிப்பாம்

## பட்டுப்பூச்சி வளர்ப்பில்

## அமைச்சருக்கு எம். பி. ஆட்சேபம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள வட்டக்கச்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பு தொடர்பான தொழிலாளர் வெளியிடங்களிலிருந்துதெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாகக் கிளிநொச்சி எம. பி. திரு. வி ஆனந்தசங்கரி சம்பந்தப்பட்டஅமைச்சருக்கும் அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் தமது ஆட்சேபனையைத் தெரிவித்து இதற்குப் பரிகாரம் காணுமாறு அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

அவர்தமது ஆட்சேபனையில் கூறியிருப்பதாவது:-

'பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழிலுக்கு வேண்டியதொழிலாளர் பலர் இத்தொகுதியிலிருந்தும், வேறு இடங்களிலிருந்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பது எனக்குஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு நேர்முகப் பரீட்சைக்குத் தோறறியவர்கள் பல தில்லுமுல்லுகளைக் கடந்துதான் தோற்றியுள்ளார்கள் என்றும் அறியக்கிடக்கின்றது. எனவே இத்தகைய குறுக்குவழி நியமனங்களைக் கைவிட்டு தொழில் வங்கி மூலம் தொழிலாளர்கள் நியமனம் செய்யவும்.' [அ]

## 'அருட்பணி புரியும் திருமுறைமன்றம்'

(யாழ்ப்பாணம்)

'சைவத் திருமுறைகளைத் திக்கெங்கணும்' பரப்பி அருட்பணி புரிந்து வரும் தெய்வீகத்தன்மை வாய்ந்த திருமுறை மன்றம் இன்றுமேலும் ஓர் பெரும் பணியில் காலடி எடுத்து வைத்துள்ளது இது சைவப் பெருமக்கள் செய்த தவப்பயன் எனின் அது மிகையாகாது. ஒவ்வொரு குழந்தையும் திருமுறை மன்றத்தின் வகுப்பில் கலந்து பயன்பெற வேண்டும். திருமுறை மன்றத்தின் பணிவளர்வதாகுக '

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன். வண்ணை நீராவியடி வீரகத்திநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற, யாழ். திருமுறை மன்றத்தின் சைவசமய பாட திருமுறை வகுப்புகளின் ஆரம்ப வைபவத்திற்குத் தலைமை வகித்துரையாற்றிய போது குறிப்பிட்டார்.

திருமுறை மன்றப் பொருளாளர் திரு, சி. கிருஷ்ணமூர்த்தி யாவரையும் வரவேற்று உரையாற்றினர். சிவதர்மவள்ளல் திரு. கனகராஜா மங்கள விளக்கேற்றி வைபவத்தைத் தொடக்கிவைத்தார்.

இவ்வைபவத்தில் சைவப் புலவர் திரு. மு, திருஞான சம்பந்தபிள்ளை, பண்டிதர் திரு. தி. கணபதிப்பிள்ளை, சைவப்புலவர் சங்கீதபூஷணம் திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி, ஸ்ரீ வை. இரகுநாதமுதலியார், அருணோதயாகக்கல்லூரி அதிபர் திரு. வி, சிவசுப்பிரமணியம், திரு. பொன். விஜயானந்தன், டாக்டர் நா. கனகரத்தினம், ஆசிரியர் திரு ப. கணபதிப்பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினர்.

## தொற்று நோய்த் தடுப்புத் தீவிரம்

[உடுப்பிட்டி]

வடமராட்சியில் சுகாதாரப் பகுதியினர் தொற்று நோய்த் தடுப்பு இயக்கத்தைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இளம் பிள்ளைவாதம், கயரோகம் போன்ற பயங்கர நோய்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் சுகாதார அமைச்சு இளம்பிள்ளைவாதம் என அழைக்கப்படும் போலியோ தடுப்பு மருந்து பி. சீ. ஜீ. எனப்படும் கயரோகத் தடுப்பு மருந்து, குக்கல், இருமல் முதலிய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் முக்கூட்டு மருந்து ஆகியனவற்றைப் போதியளவு அனுப்பிவைத்துள்ளதாகவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. எம். வேலும்மயிலும் தெரிவித்தார்.

சுகாதாரப் பரிசோதகர்களும், மருத்துவ மாதர்களும் தொற்றுநோய்த் தடுப்பு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு பாடசாலைகள், வீடுகள் தோறும் இத்தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகளை விநியோகித்து வருகின்றனர். (உ)

## சுண்டிக்குளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் 'பிக்பொக்கட்' அடித்து அவர்களில் வயதுகுறைந்தஒரு பெண்ணிடம் கொடுத்து அனுப்பியபோது அப்பெண் சுண்டிக்குளிநோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றார். உடனே அந்தக் குடும்பஸ்தர் 'பிக்பொக்கட்' என்று சத்தமிட்டார். அப்பெண் சென்றதை அவதானித்த ஒருவாலிபர் துரத்திச்சென்றபோது, அப்பெண் காசையும், பர்சையும் கொடுத்துவிட்டார்.

அதே இடத்தில் மாணவி ஒருவரிடம் 60 ரூபா கொண்ட சிறு பெர்சையும் பிக்பொக்கட் அடித்த இரு பெண்கள், கோவில் வீதி நோக்கிச் சென்றனர். வாலிபர்கள் அப்பெண்களை துரத்திச் சென்று காசையும் பேர்சையும் எடுத்துக்கொண்டார்கள்.

5 பெண்களை பஸ்ஸில் ஏற்றி நேராக யாழ்பொலிசில் கொண்டுபோய், பஸ் கண்டக்டர் ஒப்படைத்தார். மற்றும் இரு பெண்களை இளைஞர்கள் காரில்ஏற்றிச்சென்று பொலிஸில் ஒப்படைத்தார்கள்

போர்சுகளை பறிகொடுத்த குடும்பஸ்தரும், மாணவியும் பொலிஸில் புகார் செய்தனர். 7 பெண்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

## வெள்ளத்தினல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யப்படாமையும், குப்பை கொட்டி மதவு மூடியிருக்கின்றமையுமேயாகும் இப்பகுதிக்குள் அமைந்திருக்கும் வைரவகோவிலின் கோபுரப் பகுதி மழை காரணமாகவெடித்து இடிந்துவிழக்கூடிய நிலையில் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தினுள் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் நேற்று யாழ். வளாகத்தில் அமைந்துள்ள கோவிலுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

வளாகத்துக்கு அருகில் உள்ள புகையிரதப் பாதை மீது நீர் வடியாத போதிலும் இன்று புகையிரதம் அப் பாதை ஊடாக சென்றது. வளாகத்தின் வகுப்பறைக்குள் புகுந்த வெள்ளம் இன்னும் வடிந்து செல்லவில்லை. சேர். பொன். இராமநாதன் வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (கோண்டி)

### பயிர்கள் சேதம்

வெள்ளத்தினல் பண்டத்தரிப்பு, சுழிபுரம், சங்கானை ஆகிய பகுதிகளில் அண்மையில் விதைக்கப்பட்ட நெல் விதைகள் யாவும் அழிந்துறும் சேதமடைந்தது. போயுள்ளன.

விவசாயிகளின் பிற்றாட், கோவா போன்ற பயிர்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இப்பகுதியின் பல இடங்களில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு வீதிகள் குறுக்காக வெட்டப்பட்டுள்ளதினல் பஸ் சேவைகள் நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (பண்டி)

### 150 அடி தூரம் வெள்ளம்

யாழ். பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக நெல்லியடி கனுவில் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. நெல்லியடி - கொடிகாமம் வீதியில் 150 அடி தூரத்திற்கு ஒரு அடிக்கு மேற்பட்ட நீர் தேங்கி நிற்கின்றது. அந்நீர் வடிந்தோட முடியாததால் மாணவர்கள், பிரயாணிகள், வாகனங்கள் பிரயாணம் செய்ய முடியாமல் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

நீர் தேங்கிநிற்கும் பகுதிக் கண்மையில் மதகு ஒன்றிருந்தும் மதகின் நிலை காரணமாக நீர் வடிந்தோட முடியாதவாறு உள்ளது.

### வீடு சேதம்

நெல்லியடி - கொடிகாமம் வீதியில் தென்னைமரம் முறிந்ததன் காரணமாக வீடொன் றும் சேதமடைந்தது.

## ஸிக்மகளூரில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி[

வாக்களிப்பு அமைதியாக நடைபெறுவதாகவும் சமூக எதிர்ப்பு தலைதூக்காவண்ணம் பொலிசார் விழிப்புடன் இருப்பதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

7ம் திகதி இரவுக்கு முன் தேர்தல் முடிவு அறிவிக்கப் பட்டுவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. [உ]

## கடலில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்களின் படகை கைவிட்ட நிலையில் இலங்கை மீனவரின் படகில் ஏறி நேற்றுமுன்தினம் காலை பூநகரி கரையை அடைந்தனர். சிலமணிநேரத்தில் எதிர்பாராத விதமாக, இவர்களின் கைவிடப்பட்ட படகும் பத்திரமாக பூநகரி கரையை அடைந்தது

மயக்கமுற்ற நிலையில் இந்திய மீனவர்கள் பூநகரி மட்டுவில்நாடு கிராம சேவகர் எம். ஜெயானந்தனிடம் ஒப்படைக்கப்பட்ட போது இவர்களுக்கு உடனடி உதவிகள் அளித்து நேற்றுமாலை ஆறு மீனவர்களும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் சம்பந்தமாக கிளிநொச்சி பொலிஸார் இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

## கண்டக்டர் கொலை இவர்களுக்கும் பிணை

(கொடிகாமம்)

பஸ் கண்டக்டர் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப் பட்டுள்ளது. செல்வராசா என்ற பஸ் கண்டக்டரை மறவன்புலோவில் அடித்துக் கொலைசெய்தார்கள் என்ற சந்தேகத்தில் சாவகச்சேரிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதியாகராஜாரேருகினியம்மா, மளவராயர் ஆகிய இருவரும் ஏற்கெனவேசாவகச்சேரி நீதிமன்றத்தில் பிணையில் விடப்பட்டனர்.

## ஜி. ஜி. நினைவுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்[

அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தக் கூட்டம் இம்மாதம் 8ம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் உப தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடமாநிலக் கல்வி அதிபதி திரு ரி. மாணிக்கவாசகர், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, திரு. ஆர். என். சிவப்பிரகாசம், திரு. நூர்முகமது, திரு. எஸ். எஸ். சுந்தரம், திரு. முதலியார், திருமதி அந்தோனியார் சுவாமிநாதர் மற்றும் பலர் பேசுவர். [க-அ]

## “வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குக”

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும் என சமூகசேவை அமைச்சர் திரு. அசோகா கருணரத்தினவைக் கோரும் தீர்மானம், நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேறியது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில நேறறுக்காலை நடந்த இக் கூட்டத்தில், தற்பொழுது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளோருக்கு உதவுமுகமாக அப் பாடசாலையை ஒருவாரம் மூடுமாறு கல்விஅமைச்சரை கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விரு அமைச்சர்களுக்கு நிலைமையை விளக்கி உடனடியாக கடிதம் எழுதுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாக இம்மாதம் 26ம் திகதி நடைபெறவிருந்த தமிழ்க் காங்கிரஸ் வருடாந்த மாநாட்டை டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [க-அ]

## மீண்டும் பயிர்ச்செய்கை

(உடுப்பிட்டி)

துன்னலை தெற்கில் இதுவரையும் பயிரிடப்படாதிருந்த 200 ஏக்கர் நிலத்தில் மீண்டும் பயிர்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கால்நடைகளின் தொல்லை காரணமாகவே இந்நிலத்தில் விவசாயிகள் விவசாயம் மேற்கொள்ளாதிருந்து வந்தனர்.

கிராமசேவை உத்தியோகத்தர் திரு. செ. அ. ஞானச்சந்திரனின் முயற்சியைத் தொடர்ந்து பிரஸ்தாப 200 ஏக்கர் நிலத்தில் நெல்பயிரிடப் படவுள்ளது.

இதற்கு முன்னேடியாக கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், கால்நடைச் சொந்தக்காரரும் கடுமையாக எச்சரிக்கைசெய்யப்பட்டுள்ளார்கள். (உ)

## பரு. நகரப்பகுதி மக்களுக்கு கடன்வசதி

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள வரியிறுப்பாளர்களின் வாளி மலசல கூடங்களை குழிமலசல கூடங்களாக மாற்றுவதற்கு, வீடமைப்புத் திணைக்களம், நகரசபையின் சிபார்சின் பேரில் தலா 4000/- ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது

அண்மையில் பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் யாழ். மாவட்ட வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. இராசரத்தினம், பருத்தித்துறை எம பி திரு. க. துரைரத்தினம், பருத்தித்துறை நகரசபை அதிகாரிகள் வரியிறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as Newspaper in SriLanka.